# தமிழ்மொழி – அழகியற் கற்கைகள் நிலையம், றக்பி

# Rugby Centre for Tamil Language & Culture

## தமிழ்மொழித் திறன் போட்டி– 2026

*பாலர் பிரிவு 1 : வயது 3 முதல் 5 வரை*

*பாடல்: சாய்ந்தாடம்மா*

சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு - சாயக்கிளியே சாய்ந்தாடு

குத்துவிளக்கே சாய்ந்தாடு - கோயில் புறாவே சாய்ந்தாடு
மயிலே குயிலே சாய்ந்தாடு - மாடப்புறாவே சாய்ந்தாடு

சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு - தாமரைப்பூவே சாய்ந்தாடு
குத்துவிளக்கே சாய்ந்தாடு - கோயிற் புறாவே சாய்ந்தாடு

பச்சைக்கிளியே சாய்ந்தாடு - பவழக்கொடியே சாயந்தாடு
சோலைக்குயிலே சாய்ந்தாடு - சுந்தரமயிலே சாய்ந்தாடு

கண்ணே மணியே சாய்ந்தாடு - கற்பகக் கொடியே சாய்ந்தாடு
கட்டிக் கரும்பே சாய்ந்தாடு - கனியே பாலே சாய்ந்தாடு.

சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு - சாயக்கிளியே சாய்ந்தாடு
குத்துவிளக்கே சாய்ந்தாடு - கோயில் புறாவே சாய்ந்தாடு

*பாலர் பிரிவு 1 : வயது 6 முதல் 7 வரை*

*பாரதியார் பாடல் : ஓடி விளையாடு பாப்பா*

ஓடி விளையாடு பாப்பா! - நீ ஓய்ந்திருக்க லாகாது பாப்பா!
கூடிவிளையாடு பாப்பா! - ஒரு குழைந்தையை வையாதே பாப்பா!. 1

சின்னஞ் சிறுகுருவி போலே - நீ திரிந்து பறந்துவா பாப்பா!
வண்ணப் பறவைகளைக் கண்டு - நீ மனதில் மகிழ்ச்சிகொள்ளு பாப்பா! 2

கொத்தித் திரியுமந்தக் கோழி - அதைக் கூட்டி விளையாடு பாப்பா!
எத்தித் திருடுமந்தக் காக்காய் - அதற்கு இரக்கப் படவேணும் பாப்பா! 3

பாலைப் பொழிந்து தரும், பாப்பா! - அந்தப் பசுமிக நல்லதடி பாப்பா!
வாலைக் குழைத்துவரும் நாய்தான் - அது மனிதர்க்குத் தோழனடி பாப்பா! 4

வண்டி இழுக்கும் நல்ல குதிரை, - நெல்லு வயலில் உழுதுவரும் மாடு,
அண்டிப் பிழைக்கும் நம்மை ஆடு, - இவை ஆதரிக்க வேணுமடி பாப்பா! 5

காலை எழுந்தவுடன் படிப்பு - பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுதும் விளையாட்டு - என்று
வழக்கப் படுத்திக்கொள்ளு பாப்பா!

பொய்சொல்லக் கூடாது பாப்பா! - என்றும்
புறஞ்சொல்ல லாகாது பாப்பா!
தெய்வம் நமக்குத்துணை பாப்பா! - ஒரு
தீங்குவர மாட்டாது பாப்பா!

பிரிவு 2

*1.* *வயது 8 முதல் 10 வரை : உலக நீதி – "ஓதாமல் ஒரு நாளும்"*

**ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம் (1)**
**ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம் (2)**
**மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டாம் (3)**
**வஞ்சனைகள் செய்வாரோடு இணங்க வேண்டாம் (4)**

**நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்ல வேண்டாம் (1)**
**நிலையில்லாக் காரியத்தை நிறுத்த வேண்டாம் (2)**
**நஞ்சுடனே ஒருநாளும் பழக வேண்டாம் (3)**
**நல்லிணக்கம் இல்லாரோடு இணங்க வேண்டாம் (4)**

**போகாத இடந்தனிலே போக வேண்டாம் (5)**
**போகவிட்டு புறஞ்சொல்லித் திரிய வேண்டாம் (6)**
**அஞ்சாமல் தனிவழியே போக வேண்டாம் (5)**
**அடுத்தவரை ஒருநாளும் கெடுக்க வேண்டாம் (6)**

**மனம்போன போக்கெல்லாம் போக வேண்டாம் (1)**
**மாற்றானை உறவென்று நம்ப வேண்டாம் (2)**
**தனம்தேடி உண்ணாமல் புதைக்க வேண்டாம் (3)**
**தருமத்தை ஒருநாளும் மறக்க வேண்டாம் (4)**

**வார்த்தை சொல்வார் வாய்பார்த்துத் திரியவேண்டாம் (1)**
**மதியாதார் தலைவாசல் மிதிக்க வேண்டாம் (2)**
**மூத்தோர்சொல் வார்த்தைகளை மறக்க வேண்டாம் (3)**
**முன்கோபக் காரரோடு இணங்க வேண்டாம் (4)**

**ஓதாமல் ஒருநாளும்.........**

## 2. *வயது 11 முதல் 12 வரை : ஔவையார் பாடல்*

நல்வழி

(விரும்பிய நான்கு பாடல் மனனம்)

நல்வழி

வாழ்க்கைக்கு நல்வழி காட்டும் 41 வெண்பாக்களையுடைய நூல்,

1. கடவுள் வாழ்த்து

பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன்-கோலம்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீ எனக்குச்
சங்கத் தமிழ் மூன்றும் தா.

2. வெண்பா : 1

புண்ணியம்ஆம் பாவம்போல் போனநாள் செய்தஅவை
மண்ணில் பிறந்தார்க்கு வைத்தபொருள் -எண்ணுங்கால்
ஈதொழிய வேறில்லை; எச்சமயத்தோர் சொல்லும்
தீதொழிய நன்மை செயல்

விளக்கம:

மனிதன் பிறக்கும் போதும், இறக்கும் போதும் அவன் கூட வருவது அவன் செய்த புண்ணியம் பாவம் என்று கூறும் இரண்டு மட்டுமே, இதைத் தவிர வேறு எதுவும் கூட வாராது, அனைத்து சமயமும் கூறுவது தீமையை செய்யாதே உன்னால் முடிந்த நன்மையை செய் என்பது தான்…

3. வெண்பா : 3

இடும்பைக்(கு) இடும்பை இயலுடம்(பு) இதன்றே
இடும்பொய்யை மெய்யென்(று) இராதே –இடுங்கடுக
உண்டாயின் உண்டாகும் ஊழில் பெருவலிநோய்
விண்டாரைக் கொண்டாடும் வீடு

விளக்கம்:

நிலையில்லாத இந்த உடம்பை, மெய் என்று கருதி அதற்கு அனைத்தும் செய்கிறாயே, மெய் என்று கூறும் உடல் பொய் என்பதை உணர்ந்து, வறியவருக்கு விரைந்து காலம் தாழ்த்தாமல் ஈகை செய்க, மக்கள் ஊழின் வினைப்படி நல்ல காரியம் செய்து செல்ல வேண்டும் என்று நினைக்கும் சொர்க்கம் உங்களுக்கு வாசல் கதவை திறக்கும்

4. வெண்பா : 11

ஒருநாள் உணவை ஒழியென்றால் ஒழியாய்
இருநாளுக்கு ஏலென்றால் ஏலாய் –ஒருநாளும்
என்நோ(வு) அறியாய் இடும்பைகூர் என்வயிறே
உன்னோடு வாழ்தல் அரிது

விளக்கம்:

ஒரு நாள் எனக்கு பசி வேண்டாம் அமைதியாக இரு என்று சொன்னால் வயிரே நீ கேட்க்க மாட்டாய், சரி உணவு அதிகமாக கிடைக்கிறது ஆகையால் இரண்டு மூன்று நாட்களுக்கு தேவையானவற்றை இன்றே நிரப்பிக் கொள் என்றால் அதையும் செய்ய மாட்டாய். நாள் தவறாமல் ஒவ்வொரு வேலையும் உன்னையை நிரப்புவதே பெரும் வேலையாக இருக்கிறது , உன் தேவைக்காகவே பலருடன் போராட வேண்டி இருக்கிறது. உன்னோடு வாழ்வது துன்பத்தை தருகிறது.

5. வெண்பா : 12

ஆற்றங் கரையின் மரமும் அரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழும் அன்றே –ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு.

விளக்கம்:

ஆற்றங்கரையில் உள்ள மரம், அரச வாழ்க்கை போகம் ஆகியவை நிலையில்லாமல் அழிந்து விடும். உழுதுண்டு வாழும் வாழ்வை விட மேலான வாழ்க்கை வேறு ஒன்று இங்கு இல்லை, மற்ற வேலை அனைத்தும் உழவை விட குறைவானவை தான்.

6. வெண்பா : 38

நன்றென்றும் தீதென்றும் நானென்றும் தானென்றும்
அன்றென்றும் ஆமென்றும் ஆகாதே –நின்றநிலை
தானதாம் தத்துவமாம் சம்பறுத்தார் யாக்கைக்குப்
போனவா தேடும் பொருள்.

விளக்கம்:

நல்லது இது என்றும், கெட்டது எது என்றும், இதை செய்தவன் நான் என்றும், அவன் என்றும், இது நடந்து இன்று என்றும் அன்று என்றும் வாழ்க்கையில் நடைபெறும் விஷயங்களை பேதம் பிரித்து பார்க்காமல் இருக்கும் பற்று அற்ற நிலையே உண்மை நிலையாகும்.
கோரைப்புல்லை வெட்டி அதை கட்டுவதற்கு கோரைப்புல்லை கயிறாக பயன்படுத்துவதை விட்டு விட்டு, வேறு கயிறு தேடும் மனிதரைப் போல், இறைவன் நம் உள்ளே இருக்கிறான், அவனே அனைத்திற்கும் காரணம் என்பதை உணராமல் இருப்பது சரியாகாது.

7. வெண்பா :40

தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும் –கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர்.

விளக்கம்:

தெய்வப் புலவர் திருவள்ளுவர் எழுதிய திருக்குறளும், நான்கு வேதத்தின் முடிவும், அப்பர், சம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகிய மூவர் பாடிய தேவாரமும், மாணிக்க வாசகர் பாடிய திருவாசகமும், திருக்கோவையும், திருமூலர் பாடிய திருமந்திரம் ஆகிய நூல்கள் சொல்லும் பொருள்கள் அனைத்தும் ஒன்று தான் என்று நீ உணர்ந்து கொள்.

*3. வயது 13 முதல் 14 வரை : திருக்குறள்*

*அதிகாரம் 10 – இனியவை கூறல்*

குறள் #91

**இன்சொலால் ஈரம் அளைஇப் படிறிலவாம்**
**செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்.**

பொருள்

ஒருவர் வாயிலிருந்து வரும் சொல் அன்பு கலந்ததாகவும், வஞ்சனையற்றதாகவும், வாய்மையுடையதாகவும் இருப்பின் அதுவே இன்சொல் எனப்படும்.

குறள் #92

**அகன்அமர்ந் தீதலின் நன்றே முகனமர்ந்து**
**இன்சொலன் ஆகப் பெறின்.**

பொருள்

முகம் மலர்ந்து இனிமையாகப் பேசுவது, அகம் குளிர்ந்து ஒன்றைக் கொடுப்பதை விட மேலான பண்பாகும்.

குறள் #93

**முகத்தான் அமர்ந்தின்து நோக்கி அகத்தானாம்**
**இன்சொ லினதே அறம்.**

பொருள்

முகம் மலர நோக்கி, அகம் மலர இனிய சொற்களைக் கூறுவதே அறவழியில் அமைந்த பண்பாகும்.

குறள் #94

**துன்புறூஉம் துவ்வாமை இல்லாகும் யார்மாட்டும்**
**இன்புறூஉம் இன்சொ லவர்க்கு.**

பொருள்
இன்சொல் பேசி எல்லோரிடத்திலும் கனிவுடன் பழகுவோர்க்கு `நட்பில் வறுமை' எனும் துன்பமில்லை.

குறள் #95

**பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு**
**அணியல்ல மற்றுப் பிற.**

பொருள்
அடக்கமான பண்பும், இனிமையாகப் பேசும் இயல்பும் தவிர, ஒருவருக்குச் சிறந்த அணிகலன் வேறு இருக்க முடியாது.

குறள் #96

**அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை**
**நாடி இனிய சொலின்.**

பொருள்
தீய செயல்களை அகற்றி அறநெறி தழைக்கச் செய்ய வேண்டுமானால், இனிய சொற்களைப் பயன்படுத்தி நல்வழி எதுவெனக் காட்ட வேண்டும்.

குறள் #97

**நயன்ஈன்று நன்றி பயக்கும் பயன்ஈன்று**
**பண்பின் தலைப்பிரியாச் சொல்.**

பொருள்

நன்மையான பயனைத் தரக்கூடிய நல்ல பண்பிலிருந்து விலகாத சொற்கள் அவற்றைக் கூறுவோருக்கும் இன்பத்தையும், நன்மையையும் உண்டாக்கக் கூடியவைகளாகும்.

குறள் #98

**சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்**
**இம்மையும் இன்பம் தரும்.**

பொருள்

சிறுமைத்தனமற்ற இனியசொல் ஒருவனுக்கு அவன் வாழும் போதும், வாழ்ந்து மறைந்த பிறகும் புகழைத் தரக்கூடியதாகும்.

குறள் #99

**இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ**
**வன்சொல் வழங்கு வது.**

பொருள்

இனிய சொற்கள் இன்பத்தை வழங்கும் என்பதை உணர்ந்தவர் அதற்கு மாறாக எதற்காகக் கடுஞ் சொற்களைப் பயன்படுத்த வேண்டும்?.

குறள் #100

**இனிய உளவாக இன்னாத கூறல்**
**கனிஇருப்பக் காய்கவர்ந் தற்று.**

பொருள்

இனிமையான சொற்கள் இருக்கும்போது அவற்றை விடுத்துக் கடுமையாகப் பேசுவது கனிகளை ஒதுக்கி விட்டுக் காய்களைப் பறித்துத் தின்பதற்குச் சமமாகும்.

## *4. வயது 14 முதல் 15 வரை : திருக்குறள்*

### *அதிகாரம் 12 – நடுவு நிலைமை*

குறள் #111

**தகுதி யெனவொன்று நன்றே பகுதியாற்**
**பாற்பட் டொழுகப் பெறின்.**

பொருள்

பகைவர், அயலோர், நண்பர் எனப்பகுத்துப் பார்த்து ஒருதலைச் சார்பாக நிற்காமல் இருத்தலே நன்மை தரக்கூடிய நடுவுநிலைமை எனும் தகுதியாகும்.

குறள் #112

**செப்பம் உடையவன் ஆக்கஞ் சிதைவின்றி**
**எச்சத்திற் கேமாப் புடைத்து.**

பொருள்

நடுவுநிலையாளனின் செல்வத்திற்கு அழிவில்லை; அது, வழிவழித் தலைமுறையினர்க்கும் பயன் அளிப்பதாகும்.

குறள் #113

**நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை**
**அன்றே யொழிய விடல்.**

பொருள்

நடுவுநிலை தவறுவதால் ஏற்படக்கூடிய பயன் நன்மையையே தரக் கூடியதாக இருந்தாலும், அந்தப் பயனைக் கைவிட்டு நடுவுநிலையைத்தான் கடைப்பிடிக்க வேண்டும்.

குறள் #114

**தக்கார் தகவிலர் என்ப தவரவர்**
**எச்சத்தாற் காணப் படும்.**

பொருள்:

ஒருவர் நேர்மையானவரா அல்லது நெறி தவறி, நீதி தவறி நடந்தவரா என்பது அவருக்குப் பின் எஞ்சி நிற்கப்போகும் புகழ்ச் சொல்லைக் கொண்டோ அல்லது பழிச் சொல்லைக் கொண்டோதான் நிர்ணயிக்கப்படும்.

குறள் #115

**கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்துக்**
**கோடாமை சான்றோர்க் கணி.**

பொருள்
ஒருவர்க்கு வாழ்வும், தாழ்வும் உலக இயற்கை; அந்த இரு நிலைமையிலும் நடுவுநிலையாக இருந்து உறுதி காட்டுவதே பெரியோர்க்கு அழகாகும்.

குறள் #116

**கெடுவல்யான் என்ப தறிகதன் நெஞ்சம்**
**நடுவொரீஇ அல்ல செயின்.**

பொருள்
நடுவுநிலைமை தவறிச் செயல்படலாம் என்று ஒரு நினைப்பு ஒருவனுக்கு வந்து விடுமானால் அவன் கெட்டொழியப் போகிறான் என்று அவனுக்கே தெரியவேண்டும்.

குறள் #117

**கெடுவாக வையா துலகம் நடுவாக**
**நன்றிக்கண் தங்கியான் தாழ்வு.**

பொருள்
நடுவுநிலைமை தவறாமல் அறவழியில் வாழ்கிற ஒருவருக்கு அதன் காரணமாகச் செல்வம் குவியாமல் வறுமை நிலை ஏற்படுமேயானால் அவரை உலகம் போற்றுமே தவிரத் தாழ்வாகக் கருதாது.

குறள் #118

**சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபாற்**
**கோடாமை சான்றோர்க் கணி.**

பொருள்
ஒரு பக்கம் சாய்ந்து விடாமல் நாணயமான தாரசு முள் போல இருந்து நியாயம் கூறுவதுதான் உண்மையான நடுவுநிலைமை என்பதற்கு அழகாகும்.

குறள் #119

**சொற்கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா**
**உட்கோட்டம் இன்மை பெறின்.**

பொருள்
நேர்மையும் நெஞ்சுறுதியும் ஒருவர்க்கு இருந்தால் அவரது சொல்லில் நீதியும் நியாயமும் இருக்கும் அதற்குப் பெயர்தான் நடுவுநிலைமை.

குறள் #120

**வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்**
**பிறவும் தமபோல் செயின்.**

பொருள்
பிறர் பொருளாக இருப்பினும் அதனைத் தன் பொருளைப் போலவே கருதி நேர்மையுடன் வாணிகம் செய்தலே வணிக நெறியெனப்படும்.

NOTE:

1) Application closing date: 05 - 10 - 2026
2) Competition will be held on: 24 - 11 - 2026
3) Eligibility: The competition is open to All interested children. (Not limited to children attending Tamil school).
4) Age Eligibility: The age will be calculated as of 31st of August 2026